දුරකථන /தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
'இசுருபாய'
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/26/07/01/01
தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பக் கிளை

දිනය / திகதி / Date } 2008.04.04

**சுற்றறிக்கை இல : 2008/14**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாண மற்றும் வலயக் கணக்காளர்கள்,
சகல அதிபர்கள்.

**பாடசாலை கணனி ஆய்வுகூடங்களின்**
**<u>கணனி சார்ந்த வன்பொருள் குறைபாடுகளைத் தீர்த்தல்.</u>**

கல்வி அமைச்சினால் பாடசாலைக் கணனி ஆய்வுகூடங்களின் கணனி சார்ந்த வன்பொருள் குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும்போது கோளாறுக்குட்பட்ட கணனிகளை பழுதுபார்ப்பதுடன் கணனிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யவும் வேண்டும். கல்விச் செயலாளரின் இலக்கம் **ED/3/37/12/16** மற்றும் 2006.03.21 திகதியிடப்பட்ட **2006 /16** இலக்க சுற்றுநிருபத்தின்படி கல்வியின் பண்புசார் தரம் மிக்க பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை இதற்காகப் பயன்படுத்தலாம். இதனடிப்படையில் இவ் உத்தேச வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் போது கோளாறுக்குட்பட்ட கணனிகளைப் பழுதுபார்ப்பதற்காகவும் தற்போதுள்ள கணனிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மூலதனப் பொருள் பாராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீடு மற்றும் மூலதனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்படும் ஒதுக்கீடு ஆகிய இரண்டையும் பயன்படுத்துமாறு அறிவிக்கிறேன்.

அத்துடன் இப்பணிகளுக்கான செலவுகளை மேற்கொள்ளும்போது பாடசாலைகளின் தற்போதைய பண்புசார் உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்காக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய செயற்பட வேண்டுமென மேலும் அறியத்தருகிறேன்.

**எம்.எம்.என்.டீ. பண்டார**
செயலாளர்,
கல்வி அமைச்சு.

*tb/d/g1/nus1/circular/circular no. 2008.14*